செய்தி வெளியீடு எண்: 379 நாள் : 04.08.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணிஅவர்கள் ஆய்வு.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சிகள் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும் இன்று (4.8.2015) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் 11 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் பணிகள், சாலைப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், புதிய தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். வளர்ச்சித் திட்டப்பணிகள் மீது தனிக் கவனம் செலுத்தி, விரைந்து முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்,

மானியக் கோரிக்கை அறிவிப்புகள், உள்ளிட்ட அனைத்து அறிவிப்புகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாக செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள்அறிவுரை வழங்கினார்.

மேலும், சென்னை தவிர்த்த அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விவரங்களையும், மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் முதல் அடிமட்டப் பணியாளர்கள் வரை அதிகாலை 6 மணிக்கே களத்தில் நேராகச் சென்று ஒவ்வொரு பகுதியாக நேரில் ஆய்வு செய்து, இப்பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், நகர்ப்புற பகுதிகளில் டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.சுவர்னா, இஆப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.ராஜேந்திர ரத்னூ, இஆப., தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

- - - - - - -

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**